## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 04.04.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

*தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பின்னர் ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை கண்முன் நிறுத்தி ஒவ்வொரு அஹ்மதியும் செயல்பட வேண்டும். ஏனென்றால், நமது சீர்திருத்தத்திற்கு இது ஒரு மிகப்பெரும் வழியாக இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் என்ன? அந்த நோக்கம், இறைவனின் அடியானை அவனுக்கு அருகில் கொண்டு செல்வதேயாகும். இறை நெருக்கம் பெறுவதற்கான வழியை அவனுக்குக் காட்ட வேண்டும். இறைவனின் நிறத்தை மேற்கொள்ளும் வகையில் அந்த அடியானின் தக்வாவின் தரத்தை உயர்த்த வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் புதிதாக எந்த விஷயத்தையும் கூறவில்லை. மாறாக, திருக்குர்ஆன் கூறியுள்ள போதனைகளையே அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அழகிய முன்மாதிரியின் மூலம் நமக்குக் காட்டிய அதே விஷயங்கள்தான் அவற்றில் உள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான நல்லொழுக்கம் தொடர்பாக **இன்னக லஅலா குல்கின் அளீம்** - (68:5) நிச்சயமாக நீர் மிக உயர்வான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர் என்று அல்லாஹ் சாட்சி பகர்கின்றான். நம்பிக்கை கொண்டவர்கள் அந்த உயர்வான முன்மாதிரியைப் பின்பற்றி நடப்பது அவர்களின் கடமையாக இருக்கின்றது. **வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம்** (62:4) என்று அல்லாஹ் அறிவித்ததன் மூலமாக இறுதிக் காலத்தில் மஹ்தி, மஸீஹ் தோன்றும் போது அவர் தனது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முழுமையான முன்மாதிரியாக இருப்பார். இஸ்லாத்தின் உண்யைமான போதனைகளை பிரதிபலிக்கின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த காலகட்டமும் உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்தின் ஒரு பகுதியேயாகும். ஏனென்றால், மறுமை நாள் வரையிலுள்ள காலமானது உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலமேயாகும். இந்த பைஅத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்பவே ஒரு அஹ்மதி செய்துள்ளார். காலத்தின் தூரமானது எந்த மகத்தான போதனைகளையும் அழகிய முன்மாதிரி களையும் நமது எண்ணங்களிலிருந்து மறந்து போகும்படி செய்ததோ அந்த உயர்வான நன்மைகளில் நிலைத்திருப்பதற்கு நாங்கள் முழுமையான முயற்சி செய்வோம் என்றே நாம் நமது பைஅத் உடன்படிக்கையில் புதிய உறுதியை எடுத்திருக்கின்றோம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூல் ஒன்றில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“வழிதவறிச் சென்றுள்ள மக்களை சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், மென்மை ஆகியவற்றின் மூலம் இறைவன் பக்கமும், இறைவனின் தூய வழிகாட்டல்களின் பக்கமும் ஈர்ப்பதற்காகவே நான் இவ்வுலகில் அனுப்பப் பட்டுள்ளேன். மேலும், எனக்கு வழங்கப்பட்டுள்ள ஒளியின் மூலமாக மக்களை நேர்வழியில் நடத்துவதற்காகவே நான் வந்துள்ளேன்.”

எனவே, இந்த பணிக்காகவே அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். அல்லாஹ்வின் தூய நேர்வழிகாட்டலுக்கு ஏற்ப மக்களை வழிநடத்தவே அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான்.

அழுக்குகளில் இருந்து மக்களை வெளியேற்றவே அவர்கள் விழுந்திருக்கின்ற கிணற்றிலிருந்து அவர்களை வெளியில் கொண்டு வரவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியுள்ளான். அவ்வாறு மக்களை வெளியில் கொண்டு வருவதற்கு முயற்சி அவசியமானதாகும். மற்றவர்களை துக்கத்திலிருந்து வெளியில் கொண்டுவர நாம் நம்மை துக்கத்தில் ஆழ்த்திக் கொள்ள வேண்டும். எனவே, நேர்வழியின் பக்கம் மக்களை ஈர்த்துக் கொண்டு வருபவர் துன்பத்தை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வழியிலுள்ள துக்கத்தை வெளிப்படுத்தியவாறு மக்களை நேர்வழியின் நீரூற்றின் பக்கம் கொண்டு வருவதற்கு நான் எந்த முரசு கொட்டி அறிவிப்பேன்? என்று ஓரிடத்தில் கேட்கின்றார்கள்.

மக்களை அழுக்குகளிலிருந்து வெளியேற்றியதோடு மட்டுமின்றி, அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ள ஒளிமயமான போதனைகளில் அவர்களை வழிநடத்துவதும் அன்னாரின் பணியாக இருக்கின்றது. அதற்காக ஒரு நிரந்தரமான வழிகாட்டல் அவசியமாகும். அவர்கள் காட்டும் அந்த ஒளி இறுதியில் மனிதனை இறைவனிடம் கொண்டு சேர்க்கின்றது. அதன் ஒரு இலக்கை அடைந்ததும் அதன் அடுத்த இலக்கை அடைவதற்கான துடிப்பு இன்னும் அதிகமாக இருக்கும்.

நாம் மட்டும் இந்த ஒளிமயமான போதனைகளில் நிலைநிற்காமல் மற்றவர்களையும் இந்த ஒளிமிக்க நேர்வழியில் நடத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இது ஓர் அஹ்மதியின் மிகப்பெரும் பொறுப்பாகும். பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றியவாறு இந்த வழியில் எப்போதும் செல்ல முயற்சி செய்ய வேண்டும். மேலும் உங்களுக்கு அருகில் உள்ளவர்களுக்கும் உங்களது சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் இந்த ஒளியை எடுத்துக்காட்டி அவர்களையும் நேர்வழியில் நடத்த முயற்சி செய்ய வேண்டும். ஆனால், அதற்காக நாம் எந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்? எப்படிப்பட்ட ஞானமிக்க செயல்முறைத் திட்டம் இருக்க வேண்டும்? இது தொடர்பாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கூறியுள்ளார்கள். கடினத்தை மேற்கொண்டு வாளின் மூலமாக நான் உலகை சீர்திருத்தப் போவதில்லை. மாறாக, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், மென்மை ஆகியவற்றின் மூலமாக மக்களை நேர்வழியில் கொண்டு வரவே நான் அனுப்பப்பட்டுள்ளேன் என்றே அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய அதே அழகிய முன்மாதிரியின்படி செயல்பட்டு மென்மை, நல்லொழுக்கத்தை நிலைநாட்டுவதில் தனது வீட்டிற்குள்ளும், தனது நண்பர்கள் மத்தியிலும், தனது சுற்றுச்சூழலிலும், தனது எதிரிகளிடமும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிக உயர்வான நல்லுதாரணத்தை நிலைநாட்டியுள்ளார்கள். உள்ளங்களை வெல்வதற்கு இந்த வழிமுறையைத்தான் கடைபிடிக்க வேண்டும். இதைத்தான் தன்னிடம் பைஅத் செய்துள்ள தனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்கள் போதித்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“கடினத்தை மேற்கொள்ளாதீர்கள். மென்மையைக் கடைபிடிக்க வேண்டும் என்றே நான் கூறுகின்றேன். போர் செய்வது இந்த இயக்கத்திற்கு எதிரான செயலாகும். மென்மையாக நடந்து இந்த இயக்கத்தின் உண்மையை உங்களது தூய்மையான உள்ளம், நன்னடத்தை ஆகியவற்றால் நிரூபித்துக் காட்டுங்கள். இது எனது போதனையாகும். இதை நீங்கள் நினைவில் வையுங்கள். அல்லாஹ் இதில் உறுதியாக நிலைநிற்கும் தன்மையை உங்களுக்கு வழங்குவானாக!”

ஒரு நபர் வெளியில் மற்றவர்களிடம் மென்மையுடனும், சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்கிறார். ஆனால், தனது வீட்டிலுள்ளவர்களிடம் உள்ள தொடர்பில் அவர் இவற்றை

கடைபிடிக்காமல் அவரது நிலை இதற்கு நேர் மாறானதாக இருக்கின்றது என்று தெரிய வந்தால் நாம் யாருக்கு தப்லீக் செய்கின்றோமோ அவர் நமக்கு பக்கத்தில் வந்து நமது இந்த நிலையைப் பார்த்தால் அவர் திரும்ப தான் இருந்த இடத்திற்கே சென்று விடுவார். இவர்கள் கூறுவது ஒன்று; செய்வது மற்றொன்று என அவர் கருதுவார். இவ்வாறு அவர்கள் ஒளிமிக்க நேர்வழியில் செல்வதற்குப் பகரமாக நாமே அவர்களை வழிதவறிச் செல்ல விட்டுவிடுகின்றோம். நம்மை நமது நிலைமைகளின் பக்கம் கவனமூட்டியவாறு ஓரிடத்தில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

சீர்திருத்தம், தக்வா, நன்மை, நல்லொழுக்கம் ஆகியவற்றை சரியாக பேண வேண்டும். சிறிய விஷயத்தில்கூட இவர்கள் கோபப்படுகின்றார்கள் என்பதுதான் எனது ஜமாஅத் தொடர்பாக எனக்கிருக்கும் மிகப்பெரும் கவலையாகும். பொது சபையில் எவரைப் பார்த்தாவது முட்டாள் என்று கூறினாலும் அது மிகப்பெரும் தவறாகும். உங்களது சகோதரரிடத்தில் ஏதாவது தவறை நீங்கள் கண்டால் இறைவன் அவரை காப்பாற்ற அவருக்காக துஆ செய்யுங்கள். மாறாக அவரது குறையை அறிவித்துக் கொண்டிருப்பது சரியல்ல. ஒருவரது மகன் தீய நடத்தை உள்ளவர் என்பதற்காக அவரது தந்தை அவரை வீணாக்குவதில்லை. மாறாக, தனிமையில் தனது மகனுக்கு நல்லதை புரிய வைக்க அவர் முயற்சி செய்வார். இது தீய செயலாகும். இதிலிருந்து நீ விலகிவிடு என்று தனது மகனிடம் அவர் கூறுவார்.

எனவே, எவ்வாறு மென்மையுடனும், சகிப்புத்தன்மையுடனும், கனிவுடனும் நீங்கள் உங்களது பிள்ளைகளுடன் நடந்து கொள்கின்றீர்களோ அவ்வாறே உங்கள் சகோதரர்களிடமும் நீங்கள் பரிமாற வேண்டும். எவரது நல்லொழுக்கம் சரியாக இல்லையோ அப்படிப்பட்டவரது ஈமான் ஆபத்திற்கு ஆளாகி விடுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கின்றது. ஏனென்றால், அப்படிப் பட்டவரிடத்தில் அகங்காரத்தின் வேர் இருக்கின்றது. அப்படிப்பட்டவரிடம் இறைவன் திருப்தி அடையவில்லையென்றால் அவர் அழிந்து விடுவார்.

எனவே, அவரது நல்லொழுக்கத்தின் நிலை இவ்வாறு மோசமாக இருக்கும் போது மற்றவர்களுக்கு போதிப்பதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கின்றது?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த போதனை மிகவும் முக்கியமான போதனையாகும். எனக்கு ஒவ்வொரு நாளும் சில கடிதங்களில் முறையீடுகள் வருகின்றன. அவற்றை படிக்கும்போது ஒருவருக்கு பிறருடன் சண்டை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் மென்மையையும், நல்லொழுக்கத்தையும் பேணாமல் இருப்பதுதான் என்பது தெரிய வருகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது கவலையை வெளிப்படுத்திய அந்த காலத்தில் மென்மை, சகிப்புத்தன்மை ஆகியவை குறைந்ததன் காரணமாக ஒரு சிலர்தான் இவ்வாறு தீய நடத்தையுள்ளவராக இருந்திருப்பார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு கவலை ஏற்பட்டது. ஆனால் ஜமாஅத்தின் எண்ணிக்கை வளர்ச்சியடையும் போது அத்துடன் சில தீமைகளும் வளர்ச்சியடைகின்றன. எனவே, இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஜமாஅத்தின் அமைப்பு ஓரளவு சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியும். உண்மையான சீர்திருத்தத்தை ஒவ்வொரு மனிதனும் தனது செயல்கள் மூலமாகத்தான் செய்ய முடியும். ஒவ்வொரு அஹ்மதியும், 'எவரது ஒழுக்கம் நல்லதாக இல்லையோ எனக்கு அவரது ஈமான் ஆபத்தில் இருக்கின்றது என்ற அச்சம் உள்ளது' என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த எச்சரிக்கையை படித்தால் அதனால் அவரது உள்ளம் நடுங்கும். அவ்வாறு நடுங்க வேண்டும். நான் ஆய்வு செய்து பார்த்ததில் அகங்காரமும் மென்மை, சகிப்புத்தன்மை ஆகியவற்றின்

குறைவும்தான் பல சண்டைகளின் அடிப்படைக் காரணமாக இருக்கின்றன. ஒரு பிரிவினர் ஏதாவது பேசி விட்டால் மற்றவர்கள் சண்டையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் மென்மையைக் கடைபிடிப்பதற்குப் பகரமாக எதிர் தரப்பினர் பேசியதை விட கடுமையான முறையில் பதில் கூறுகின்றார்கள். இதன் விளைவாக சண்டைகள் நீளமாகி விடுகின்றன. சீர்திருத்தக் கமிட்டிகளாலும் விஷயத்திற்கு தீர்வு காண முடியவில்லை. அதற்குப் பிறகு கஸா(நீதித்துறை)விடம் பிரச்சனை செல்கிறது. பிறகு இரு பிரிவினர்களில் ஏதாவது ஒரு பிரிவினர் நீதித்துறையின் தீர்ப்பை ஏற்காமல் இருந்தால் நாம் விரும்பாத நிலையிலும்கூட இப்படிப்பட்டவர்களை ஜமாஅத் அமைப்பிலிருந்து நீக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இவ்வாறு ஒரு நல்ல குடும்பம் ஏணியைக் கண்ட பிறகும் அந்த ஏணியை இழக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. பிறகு சிலர் இவ்விஷயத்தில் எந்த அளவு பிடிவாதம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல் இவர்களது ஈமானுக்கே ஆபத்து ஏற்படும் அபாயம் இருக்கிறது. மேலும், உண்மையில் இப்படிப்பட்டவர்கள் தங்களது ஈமானை இழந்து விடுகின்றார்கள். பெற்றோர்கள் ஜமாஅத் அமைப்பின் மூலம் தண்டிக்கப்படும் போது நல்ல இயல்பிலுள்ள இவர்களது சந்ததிகளுக்கும் இதனால் தீய தாக்கம் ஏற்பட்டு தங்களது சுற்றுச்சூழலில் அவர்கள் வெட்கப்பட வேண்டிய நிலைக்கு ஆளாகின்றார்கள். பிறகு இவ்வாறு கடும் சண்டையிடுகின்ற பெற்றோர்களின் வக்ஃப் செய்யப்பட்ட குழந்தைகள் தொடர்பாகவும் இந்த குழந்தைகளின் வக்ஃபை (ஜமாஅத்திற்கு தங்களை அர்ப்பணித்திருக்கும் இவர்களது நிலையை) தொடர்ந்து நீடிக்கும்படி செய்யலாமா? வேண்டாமா? என்பதைப் பற்றி ஆலோசனை செய்து முடிவு எடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. பெற்றோர்கள் தங்களது சமூகத்திற்குள்ள உரிமைகளை செலுத்தாமல் இருக்கும் நிலையில் ஜமாஅத் அமைப்பையும் ஒரு பொருட்டாக கருதாத நிலையில் அவர்களது பிள்ளைகளிடம் சீர்திருத்தம் எப்படி ஏற்பட முடியும்?

சுருக்கமாக, சகிப்புத்தன்மையையும் மென்மையையும் கடைபிடிக்காத நிலையில் ஒரு குடும்பம் தங்களது ஈமானையும் தங்களது சந்ததிகளின் ஈமானையும் அழித்து விடுகிறார்கள். பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிற்கு ஏற்ப அப்படிப்பட்டவர்கள் பிறருக்கு எதையும் கூறுவதற்கு உரிமை இல்லாதவர்களாகி விடுகின்றார்கள். இவ்வாறு சில நல்ல இயல்பிலுள்ளவர் களையும் அஹ்மதிய்யத்திலிருந்து அகற்றுவதற்கு இவர்கள் காரணமாகி விடுகின்றார்கள். ஒரு தவறிலிருந்து இன்னொரு தவறு பிறக்கின்றது. பிறகு இவ்வாறு தவறுகள் வளர்கின்றன. எனவே, இது ஒரு அஹ்மதி கவலை அடைய வேண்டிய இடமாகும்.

எவர்கள் கோபத்தின் ஆதிக்கத்திற்கு ஆளாகி அதன் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் இருக்கின்றார்களோ அப்படிப்பட்ட பெரும்பாலான அஹ்மதிகள் தங்களுக்கு தண்டனை கிடைத்த பிறகு கவலையடையக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். தங்களை மன்னிக்கும்படி எனக்கு கடிதம் எழுதுகின்றனர். எவ்வித நிபந்தனையும் இல்லாமல் கூறப்பட்ட தீர்ப்பிற்கு ஏற்ப அப்படியே கட்டுப்பட்டு நடப்போம் என அவர்கள் எழுதுகின்றார்கள். முதலிலேயே அவர்கள் சிந்தித்து நடந்திருந்தால் இப்படிப்பட்டவர்களது குடும்பமும் அவர்களது பிள்ளைகளும் வெட்கப்பட வேண்டிய நிலைமையிலிருந்து தப்பித்திருக்கலாம். உயர்வான நல்லொழுக்கத்தைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் **வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

தீமையை விட்டு அகலுவதற்கான நல்லொழுக்கத்தின் நான்காவது பண்பு மென்மையாக நடந்து கொள்ளுதல் மற்றும் இனிய சொல் கூறல் ஆகும். இந்த மேலான நல்லொழுக்கப் பண்பு மகிழ்ச்சிகரமாகத் தோற்றமளித்தல் என்ற இயல்பான உள்ளுணர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒரு குழந்தை தான் பேசுவதற்கு தகுதி பெறும் முன்பே மரியாதை, இனிய பேச்சு இவற்றிற்குப் பகரமாக சிரித்த மகிழ்ச்சிகரமான முகபாவத்தைக் காட்டுகின்றது. எனவே, மரியாதை

செய்தல் என்ற பண்பின் அடித்தளமான மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இயல்பை தக்க இடத்திலும் தருணத்திலும் தகுந்தவாறு பயன்படுத்தினால் அது மரியாதை என்னும் நல்லொழுக்கப் பண்பாக மாறி விடுகிறது.

இது தொடர்பாக இறைவனின் போதனை இதுவாகும்:

وَقُولُوا لِلنَّاسِ حُسْنًا - (البقرة: ٨٤)
لَا يَسْخَرْ قَوْمٌ مِّنْ قَوْمٍ عَسَىٰ أَنْ يَكُونُوا خَيْرًا مِّنْهُمْ وَلَا نِسَاءٌ مِّنْ نِّسَاءٍ عَسَىٰ
أَنْ يَكُنَّ خَيْرًا مِّنْهُنَّ ۚ وَلَا تَلْمِزُوا أَنْفُسَكُمْ وَلَا تَنَابَزُوا بِالْأَلْقَابِ - (الحجرات: ١٢)
اِجْتَنِبُوا كَثِيرًا مِّنَ الظَّنِّ إِنَّ بَعْضَ الظَّنِّ إِثْمٌ وَّلَا تَجَسَّسُوا وَلَا يَغْتَبْ بَّعْضُكُمْ بَعْضًا
وَاتَّقُوا اللّٰهَ إِنَّ اللّٰهَ تَوَّابٌ رَّحِيمٌ - (الحجرات: ١٣) وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ إِنَّ السَّمْعَ وَالْبَصَرَ
وَالْفُؤَادَ كُلُّ أُولٰئِكَ كَانَ عَنْهُ مَسْئُولًا (بنی اسرائیل: ٣٧)

நீங்கள் மக்களிடம் நல்ல சொற்களையே கூறுங்கள். (2:84) ஒரு சமுதாயத்தை மற்றொரு சமுதாயம் ஏளனம் செய்யக் கூடாது. அவர்கள் (ஏளனம் செய்யப்பட்டவர்கள்) மற்றவர்களை விட உயர்ந்தவர்களாக இருக்கலாம். பெண்களின் ஒரு சாரார் மற்றப் பெண்களைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை பரிகாசம் செய்யப்பட்டவர்கள் பரிகாசம் செய்பவர்களை விட உயர்ந்தவர்களாக இருக்கக் கூடும். உங்களில் ஒருவரையொருவர் இழிவாகக் கருத வேண்டாம். பட்டப் பெயர்களைக் கூறி அழைக்க வேண்டாம். (49:12) நீங்கள் தப்பெண்ணம் கொள்ளத்தக்க விஷயங்களைப் பேசாதீர்கள். பிறரது குற்றங்களை அலசி ஆராய்ந்து அதைப் பற்றி கேட்காதீர்கள். ஒருவர் மற்றவரைப் பற்றி புறம் பேச வேண்டாம். (49:13) உங்களிடம் ஆதாரம் இல்லாத எந்தவொரு குற்றத்தையும் அபாண்டமான பழியையும் எவர் மீதும் சுமத்தாதீர்கள். ஒவ்வொரு உறுப்பிடமிருந்தும் இதற்கான பரிகாரம் பெறப்படும் என்பதை நினைவில் வையுங்கள். காது, கண், உள்ளம் ஆகிய ஒவ்வொன்றிடமும் இதுபற்றி கேட்கப்படும்.

குழந்தை நல்லது எது? தீயது எது? என்பதை பிரித்து அறிந்து கொள்ளாத வரையில் ஏதாவது நல்ல விஷயத்தை செய்தாலோ அல்லது பேசினாலோ அது அக்குழந்தையின் ஏதாவதொரு உயர்ந்த நல்லொழுக்கத்தின் காரணமாகவோ அல்லது உள்ளத்திலுள்ள மென்மையின் காரணத்தாலோ அந்த செயல் அல்லது பேச்சு அந்த குழந்தையிடமிருந்து வெளிவரவில்லை. மாறாக, இது அந்தக் குழந்தைக்குள் இருக்கும் இயல்பு அல்லது ஆற்றல் ஆகும். இதனை இறைவன் அந்த குழந்தைக்கு வழங்கியுள்ளான். இதனை விளக்கிக் கூறிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மென்மையின் வேர் மனிதனுக்குள்ளேயே இருக்கின்றது என்பதற்கு ஆதாரமாக இதனை கூறியுள்ளார்கள். நல்ல இயல்பையுடைய, மார்க்கத்தில் நிலைநிற்கின்ற ஒருவர் இறைவனது கட்டளைக்கேற்ப இந்த நல்லொழுக்கத்தை பயன்படுத்துகின்றார். மேலும் மென்மையைக் கைக்கொள்வது பற்றி அல்லாஹ்வின் போதனை என்ன? இதை விளக்கவே திருக்குர்ஆனின் சில வசனங்களை அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இந்த நல்லொழுக்கத்தை உருவாக்குவதற்கு முதலாவதாக, மக்களிடம் அழகிய முறையில் பேச வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அதுவும் நன்மையான விஷயங்களைப் பேச வேண்டும். மக்களுடன் மலர்ந்து முகத்துடன் அன்பாகப் பரிமாற வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. மக்களிடம் நன்மையான விஷயங்களைக் கூறுவதற்கு முன்பாக கூறுபவரும் அந்த நன்மையான விஷயங்களை கடைபிடிக்க வேண்டும். உயர்வான நல்லொழுக்கத்தை அவர் தம்மிடம்

உருவாக்கினால்தான் அதற்கு நல்ல தாக்கம் ஏற்படும். இரு நிறங்கள் கொண்ட மனிதரால் நல்ல விளைவுகள் ஏற்படாது. பிறகு மற்றவர்களது உணர்வுகளைக் கருத்தில் கொண்டு நடப்பதற்கான போதனை வழங்கப் பட்டிருக்கிறது. சுயநலத்துடன் நடந்து கொள்ள வேண்டாம். எவரை நீங்கள் உங்களை விட மிகக் குறைந்த நிலையில் உள்ளவர்களாக கருதுகின்றீர்களோ அவர் உங்களை விட சிறந்தவராக இருக்கலாம் என்று நமக்குக் கவனமூட்டப் பட்டிருக்கின்றது. இந்த உணர்வு ஒருவரிடம் வந்து விட்டால் தன்னை சீர்திருத்திக் கொள்வதன் பக்கமும் ஒருவருக்கு கவனம் ஏற்படும். பிறகு மற்றவர்களுக்குத் தீயதாகத் தெரியும் வகையிலுள்ள பெயர்களால் ஒருவரை அழைப்பது உயர்வான நல்லொழுக்கத்திற்கு மிக தொலைவிலுள்ள விஷயம் என்று கூறப்பட்டிருக்கிறது. மென்மையைக் கைக்கொள்பவர்கள் மற்றவர்கள் மீது அனுதாபம் காட்டக் கூடியவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு பயன்தரக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால், இப்படிப்பட்ட வெறுக்கத்தக்க விஷயங்கள் ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையிலுள்ள தொடர்புகளில் விரிசலை ஏற்படுத்தும். வெறுப்பின் சுவர்கள் இதன் மூலமாக எழுப்பப்படும். இவ்வாறு தப்பெண்ணமும் தொடர்புகளில் விரிசல் ஏற்படக் காரணமாக இருக்கின்றது. நட்பை அழிக்கின்றது. இதனால் வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் வளர்கின்றது.

பிறகு மற்றவர்களது குறைகளைத் தேடி அலைவது நமது ஒழுக்கத்தையும் அழித்து விடும். இதனால் சமுதாயத்தின் அமைதியும் கெட்டு விடும். ஒருவர் தொடர்பாக மற்றவர் கூறும் அதே விஷயங்கள் ஒரு சபையில் அவரைப் பற்றிக் கூறப்பட்டால் அது அவருக்குத் தீயதாகத் தெரியும். அப்படிப்பட்ட விஷயங்களைப் பேசுவதும் நல்லொழுக்கத்திற்கு மாற்றமானதாகும். எனவே, இப்படிப்பட்ட தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்வதுடன் இத்தகைய பேச்சுக்கள் நடைபெறும் இடத்திலிருந்து விலகிச் சென்றுவிட வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர்கள் மற்றவர்களை தீய பெயர்களால் நினைவு கூர்கின்றார்களோ மேலும் தங்களது மக்கள் மீதே குற்றங்களைச் சுமத்துகின்றார்களோ மேலும் நண்பர்களைப் போல குறைகளைத் திரையிட்டு மறைப்பதில்லையோ இதற்கு மாற்றமாக ஏளனத்துடன் நடப்பதுடன் மட்டுமல்லாமல், புறம் பேசுகின்றார்களோ தப்பெண்ணம் கொள்கின்றார்களோ எழும்போது உட்காரும்போதும் மக்களின் குறைகளைத் தேடுவதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பார்களோ அவர்கள் தொடர்பாக இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்பவர்கள் ஈமான் கொண்ட பிறகு கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து நடப்பதிலிருந்தும் வெளியேறியவர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். இவர்கள் மீது அவன் தனக்கெதிராக கிளர்ச்சி செய்பவர்கள் மீது வெளிப்படுத்தும் அதே கோபத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றான்.

எனவே, இது மிகவும் கடுமையான ஒரு எச்சரிக்கையாகும். இத்தகு தீய ஒழுக்கத்தின் காரணமாக ஒரு மனிதன் தனது சகோதரனின் உள்ளத்தை புண்படுத்துவது மட்டுமின்றி அல்லாஹ்வின் கோபத்திற்கும் ஆளாகி விடுகின்றான். பிறகு இறுதியாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறிய திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் எந்த விஷயம் பற்றி உங்களுக்கு எவ்வித அறிவும் இல்லையோ அதைப் பின்பற்றி அதற்குப் பின்னால் செல்ல வேண்டாம். ஏனென்றால், கணக்கெடுக்கப்படும் அந்த நாளில் மனிதனின் உறுப்புகள் சாட்சி கூறும் என்று கூறியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

எந்த விஷயம் தொடர்பாக உங்களுக்கு எவ்வித அறிவும் இல்லையோ தேவையில்லாமல் அதைப் பின்பற்றி நடக்க வேண்டாம். ஏனென்றால், காது, கண், உள்ளம் ஆகியவற்றிடமும்

ஒவ்வொரு உடல் உறுப்பிடமும் இதுபற்றி கேட்கப்படும். பல தீமைகளும் தப்பெண்ணங்களால் மட்டும் உருவாகின்றன. ஒருவரைப் பற்றிய ஒரு விஷயத்தை இன்னொருவரிடமிருந்து கேட்ட மாத்திரத்திலேயே அது உண்மை என்று நம்பி விடுகின்றார்கள். இது மிகவும் தீய விஷயமாகும். எந்த விஷயத்தைப் பற்றி உறுதியான அறிவும் நம்பிக்கையும் இல்லையோ அதற்கு உள்ளத்தில் இடமளிக்காதீர்கள். இது தப்பெண்ணத்தை அகற்றுவதற்கான ஒரு வழிமுறையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள்! எந்த நபர் கடினத்தை மேற்கொண்டு நடக்கின்றாரோ, கோபப்படுகின்றாரோ அவரது நாவிலிருந்து இறைஞானமிக்க நுட்பமான விஷயங்கள் ஒருபோதும் வெளிவர முடியாது. அந்த உள்ளம் ஞானமிக்க விஷயங்களிலிருந்து புறக்கணிக்கப்பட்டு விடும். எவர் தனக்கு எதிராக நிற்பவர் மீது விரைவாக கோபப்பட்டு தனது கட்டுப்பாட்டை இழந்து விடுகின்றாரோ அப்படிப்பட்ட தீய எண்ணம் கொண்டவரும் கடிவாளமில்லாத நாவை உடையவரும் நுட்பமான ஞானமிக்க விஷயங்களை தமது நற்பாக்கியத்தில் பெறாதவர்களாகவும் அவற்றிலிருந்து புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் ஆகி விடுகின்றனர். கோபம், ஞானம் ஆகிய இரண்டும் ஒன்றாக இணைய முடியாது. எவர் கோபத்தின் ஆதிக்கத்தின்கீழ் வந்து விடுகின்றாரோ அவரது அறிவு மழுங்கியதாகவும் புரியும் தன்மை அறவே இல்லாமலும் இருப்பதால் அவருக்கு எப்போதும் எந்த களத்திலும் வெற்றியும் உதவியும் கிடைக்காது. கோபம் பாதி பைத்தியமாகும். இது அதிகமாக கொழுந்து விட்டு எரியும்போது முழு பைத்தியமாக ஆகலாம். நமது ஜமாஅத் இப்படிப்பட்ட எல்லா தீமைகள் நிறைந்த செயல்களிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். எந்த கிளை தனது மரத்துடன் உண்மையான தொடர்பில்லாமல் இருக்கின்றதோ அது பழங்களை தராது. எனவே, பாருங்கள்! நீங்கள் நமது உண்மையான நோக்கத்தைப் புரியாமல் இருந்தால் பைஅத் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயல்படவில்லை என்றால் உங்கள் வாதங்களால் மட்டும் எவ்வித நல்ல விளைவும் ஏற்படாது.

பிறகு கிஷ்தி நூஹ் என்ற நூலில் ஜமாஅத்திற்கு போதனை செய்தவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர் மீதும் தற்பெருமை கொள்ளாதீர்கள். அவர் உங்களுக்கு கீழுள்ளவராக இருந்தாலும் சரியே. மற்றவர்கள் உங்களை ஏசிப் பேசினாலும் நீங்கள் எவரையும் ஏசிப் பேசாதீர்கள். ஏழ்மைக் குணம், சகிப்புத்தன்மை ஆகியவற்றை கடைபிடித்து நல்லெண்ணம் கொண்டவராகவும் மக்கள் மீது அனுதாபம் காட்டக் கூடியவராகவும் நீங்கள் ஆகி விடுங்கள். அதன் மூலமாகவே நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள். பலர் தங்களது இரக்கக்குணத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். ஆனால் அவர்கள் உள்ளத்தால் ஓநாய்களாக இருக்கின்றார்கள். வெளித்தோற்றத்தில் தூயவர்களாகத் தெரியும் பலர் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் உள்ளத்தால் பாம்புகளாக இருக்கின்றார்கள். உங்களது அகமும், புறமும் ஒன்றாக ஆகாத வரையில் நீங்கள் அந்த இறைவன் முன்னிலையில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டீர்கள். நீங்கள் பெரியவர்களாக இருந்தால் சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாகக் கருதாதீர்கள். நீங்கள் அறிவுள்ள அறிஞர்களாக இருந்தால் அறிவற்றவர்களுக்கு போதனை செய்யுங்கள். அதற்கு மாறாக உங்களை நீங்களே பெரியவராகக் காட்டிக் கொண்டு அவர்களை இழிவுபடுத்தாதீர்கள். நீங்கள் பணக்காரர்களாக இருந்தால் ஏழைகளுக்கு தொண்டு செய்யுங்கள். அவர்களுடன் சுயநலத்துடனும் அகங்காரத்துடனும் நடந்து கொள்ளாதீர்கள். அழிவின் வழிகளுக்கு அஞ்சுங்கள். இறைவனுக்கு அஞ்சிக் கொண்டிருங்கள். தக்வாவைப் பேணுங்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனின் குற்றங்குறைகளை மறைக்கும் தன்மை எப்படிப்பட்டதென்றால் அவன் மனிதனின் பாவங்களையும் தவறுகளையும் பார்க்கின்றபோது அவன் தனது சத்தார் (குறைகளை மறைப்பவன்) என்ற தனது பண்பின் காரணமாக அவன் மனிதன் செய்கின்ற தவறுகளை அவன் வரம்பை மீறாத வரையில் மறைத்து வைக்கின்றான். ஆனால் மனிதனோ மற்றவர்களது தவறுகளைக் கண்டதுமே கூச்சலிடுகின்றான். உண்மையான விஷயம் என்னவென்றால், மனிதன் குறைவான தைரியமுள்ளவனாக இருக்கின்றான். ஆனால் இறைவனோ இரக்கமுடையவனும் கருணையுள்ளவனுமாவான். அநியாயக்காரனாக இருக்கும் மனிதன் தனது நஃப்ஸின் மீது அநீதியிழைக்கின்றான். இறைவனின் ஹலீம் (இரக்கமுள்ளவன்) என்ற பண்பை அவன் புரியாத காரணத்தால் வரம்பு மீறி செயல்படுகின்றான். அப்போது இறைவனின் ஸுன்திகாம் (பழிவாங்குபவன்) என்ற அவனது பண்பு செயல்படுகிறது. அது அவனை பிடிக்கின்றது. வரம்பு மீறி செயல்படுவதை பரமேசுவரன் விரும்புவதில்லை என இந்துக்கள் கூறுகின்றார்கள். ஆனால் அல்லாஹ் எந்த அளவு இரக்கமுள்ளவனும் கருணையுள்ளவனும் ஆவான் என்றால் இப்படிப்பட்ட நிலையிலும்கூட ஒரு மனிதன் மிகவும் பணிவுடனும் உருக்கத்துடனும் இறைவனின் முன்னிலையில் வீழ்ந்து விட்டால் அந்த இறைவன் கருணையுடன் அவனை பார்க்கின்றான். சுருக்கமாக, அல்லாஹ் எவ்வாறு நமது குறைகளைக் கண்டும் காணாமல் விட்டு விட்டு தனது சத்தார் (குறைகளை மறைப்பவன்) என்ற பண்பின் காரணமாக நம்மை இழிவுபடுத்தாமல் விட்டு விடுகின்றானோ அவ்வாறே நாமும் பிறரது இழிவுக்குக் காரணமாக இருக்கும் விஷயங்கள் தொடர்பாக உடனடியாக எதுவும் பேசாமல் இருக்க வேண்டும்.

நான் படித்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த மேற்கோள்களில் அவர்கள் நமக்கு மென்மை, சகிப்புத்தன்மை ஆகியவற்றைப் பற்றி கவனமூட்டியுள்ளார்கள்.

நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களை அதிகமாகப் படிப்பதற்குக் காரணம் உர்து தெரியாதவர்களுக்கு அவர்களது இந்த கருத்துக்கள் அதிகமாக சென்றடைய வேண்டும் என்பதற்காகவே யாகும். உடனடி மொழியாக்கம் உயர்ந்த தரத்தில் இருப்பதாக நாம் கருத முடியாது. அவ்வாறிருப்பது சாத்தியமுமல்ல. ஆனால், நாம் எதிர்பார்க்கும் அளவில் நமது தாகத்தை அது தணிக்கின்றது. எனவே, அதை கேட்கின்ற பலரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களை கேட்டுப் பயனடைகின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்கள் மூலமாக நாம் இஸ்லாத்தின் அழகிய போதனைகளிலிருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியிலிருந்தும் பயலனடைவதற்கும் அதிலிருந்தும் அருள்களைப் பெறுவதற்கும் அல்லாஹ் உதவி செய்வானாக. இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கமாக இருக்கின்றது. இந்த நோக்கத்தைதான் நாம் நிறைவு செய்ய வேண்டும். இதுதான் ஒரு அஹ்மதியின் வாழ்வின் நோக்கமாக இருக்க வேண்டும். அல்லாஹ் இந்த நோக்கத்தில் வெற்றி பெற நமக்கு உதவி செய்வானாக. ஆமீன்.

**JUMUA KUTHBA**
***HADHRAT KHALIFATUL MASIH V***
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 04.04.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**